கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,

பெரியகுளம்.

<u>அசல் வழக்கு எண்.</u> 157/2023 நாள். 07.08.2026

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி எண்.</u> 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமச்சந்திரன் | ஊர் | : ஆசாரிபட்டி |
| தந்தை பெயர் | : பெரியசாமி | தாலுகா | : ஆண்டிபட்டி |
| தொழில் | : ஆசிரியர் | வயது | : 43/2026 |

ஆணையுறுதி சட்டப்படி சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் 1 ம் சாட்சியின் முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கின் 2ஆம் பிரதிவாதி ஆவேன். 1ஆம் பிரதிவாதிக்காவும் சேர்த்து எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. வாதி 1ஆம் பிரதிவாதியான சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்பதற்கான சங்கத்தின் ஆண்டு அறிக்கை 2018–2024 வரைக்குண்டான ஆவணம் உண்மை நகல் பி.வா.சா.ஆ. 1

2. 1ஆம் பிரதிவாதி சங்கத்தின் பைலா உண்மை நகல் பி.வா.சா.ஆ. 2

3. 1ஆம் பிரதிவாதி சங்கத்தின் பதிவு சான்று உண்மை நகல் (பதிவு எண்.7/2018) பி.வா.சா.ஆ. 3

4. கடந்த 13.03.2020 ஆம் தேதி நான் பணியில் இருந்ததை காட்டுவதற்கு உண்டான பள்ளி வருகை பதிவேட்டின் உண்மை நகல் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்டது பி.வா.சா.ஆ– 4

5. நான் ஆசிரியர் என்பதை காட்டுவதற்குண்டான எனது அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ– 5

6. நான் 1ஆம் பிரதிவாதியின் சங்கத்தின் தலைவர் என்பதை காட்டுவதற்குண்டான அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ பி.வா.சா.ஆ– 6

7. எனது ஆதார் அடையாள அட்டை அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.7

வாதி பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.08.07 17:41:58 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.